செ.வெ.எண்: 744 நாள்: 04.11.2019

**புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.32.29 லட்சம் மதிப்பீட்டில் மேமோகிராம் மற்றும் ஆர்கான் கிரீன் லேசர் கருவிகளின் பயன்பாட்டினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேமோகிராம் மற்றும் ஆர்கான் கிரீன் லேசர் பயன்பாட்டினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (04.11.2019) துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பின்னர் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறைதீர்வு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மற்றும் நிவாரணம் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத வகையில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 73 சதவீத மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 9,621 மனுக்கள் பெறப்பட்டு பட்டாமாறுதல், முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 7,030 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இதன்மூலம் மாவட்ட நிர்வாகம் பொதுமக்களின் குறைகளை போக்கும் வகையில் திறம்பட செயலாற்றி வருகிறது.

மேலும் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பொதுமக்களுக்கு பல்வேறு உயர்தர மருத்துவ சிகிச்சைகளை வழங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றையதினம் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.18.79 லட்சம் மதிப்பீட்டில் மேமோகிராம் என்கின்ற மார்பக புற்றுநோயினை பரிசோதிக்கக் கூடிய சிறப்பு கருவி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சர்க்கரை நோயாளிகளுக்கு கண்ணில் ஏற்படும் பாதிப்புகளை ஆய்வு செய்யும் வகையில் ரூ.13.5 லட்சம் மதிப்பீட்டில் ஆர்கான் கிரீன் லேசர் என்ற புதிய கருவியும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்ற தொற்றாநோய்களை கண்டறியும் வகையில் 30 வயதிற்கு மேல் உள்ள ஆண், பெண் இருபாலரும் அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளில் வருடத்திற்கு ஒரு முறை தவறாது சென்று உடல் பரிசோதனை செய்து கொள்ள தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் தொற்றாநோய்கள் பிரிவிற்கு தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் புதிய நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "எனது மருத்துவமனை எனது பெருமை" என்ற திட்டத்தினை சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். பெரிய கார்பரேட் நிறுவனங்களின் நிதியில் இருந்து சுகாதாரத்துறைக்கு நல்ல பல உதவிகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் திருச்சி பன்னாட்டு விமான நிலைய சேவை பிரிவின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டம், ஏம்பல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்ட அவசர சிகிச்சை ஊர்தியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இதுபோன்ற மக்கள்நலத் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு மிகச்சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் டெங்கு முழு கட்டுபாட்டில் உள்ளது. அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் ஒத்துழைப்புடன் சுகாதாரத்துறை இணைந்து உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் அழ.மீனாட்சி சுந்தரம், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், மத்திய தொலை தொடர்பு ஆலோசனைக் குழு உறுப்பினர் பாஸ்கர், முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் சேட், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**